# சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2026
# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**1. சிங்கப்பூர் இலக்கியப் பரிசு என்றால் என்ன?**

1992 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சிங்கப்பூர் இலக்கியப் பரிசு (SLP), சிங்கப்பூரிலேயே ஆக உயர்த்தரமான இலக்கிய விருதாகும். நூற்று-ஐம்பதுக்கும் அதிகமானோர் இந்த விருதைப் பெற்றுள்ளனர். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை போட்டி நடத்தப்படுகிறது. இந்த விருது சிங்கப்பூரிலும் வெளிநாட்டிலும் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் சிங்கப்பூர் குடிமக்களாலும் நிரந்தரவாசிகளாலும் எழுதி வெளியிடப்பட்ட புனைவு/படைப்பாக்க அபுனைவு மற்றும் கவிதை படைப்புகளுக்கு திறந்திருக்கும்.

8 பிரிவுகள் ஒவ்வொன்றிலும் வெற்றி பெறுவோருக்கு உச்சப் பரிசாக $5,000 வழங்கப்படும். மேலும், வெற்றி பெறுபவர்களுக்கு பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட கோப்பை வழங்கப்படும்.

## 2. SLP 2026-ல் என்னென்ன மாற்றங்கள் உள்ளன?

2026 ஆம் ஆண்டுக்கான சிங்கப்பூர் இலக்கியப் பரிசில் (SLP) பல மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:

- பரிசுத்தொகை அதிகரிப்பு: பரிசுத்தொகை $3,000-லிருந்து $5,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- திருத்தப்பட்ட பிரிவுகள்: SLP 2026 விருதானது, ஆங்கிலம், சீனம், மலாய் மற்றும் தமிழ் ஆகிய நான்கு மொழிகளில் உரைநடை மற்றும் கவிதை என மொத்தம் 8 பிரிவுகளில் வழங்கப்படும். இளம் வயது (YA) மற்றும் புது வயது (NA) படைப்புகளும் SLP 2026-க்குச் சமர்ப்பிக்கத் தகுதியானவை.
- மொழிபெயர்ப்பு மற்றும் காமிக்ஸ்/கிராஃபிக் நாவல்: இந்த இரண்டு பிரிவுகளுக்கான சமர்ப்பிப்புச் சுழற்சியை நாங்கள் மறுஆய்வு செய்யும் வரை, அவை SLP 2026-ல் சேர்க்கப்படாது. இவ்வகைப் படைப்பாளர்களும் மொழிபெயர்ப்பாளர்களும், தங்களின் படைப்புகளைச் சமர்ப்பிப்பதற்கு அடுத்த தகுதிபெறும் சுழற்சியை எதிர்நோக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
- விண்ணப்பக் கட்டணம்: விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு SGD20 விண்ணப்பக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 3. யார் தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்?

விண்ணப்பிக்கும் சமயத்தில் 18 வயது நிரம்பிய சிங்கப்பூரர்கள் மற்றும் நிரந்தரவாசிகள் தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

**4. எந்த மொழிகளில் உள்ள இலக்கியப் படைப்புகள் போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்?**

சமர்ப்பிக்கப்பட்டப் படைப்புகள் பின்வரும் அதிகாரத்துவ மொழிகளில் ஏதேனும் ஒன்றில் இருக்கவேண்டும்: ஆங்கிலம், மலாய், சீனம் அல்லது தமிழ்.

**5. போட்டியில் எவ்வாறான பிரிவுகள் உள்ளன?**

மொத்தம் 8 பிரிவுகள் உள்ளன.

- புனைவு/படைப்பாக்க அபுனைவு (சீனம், ஆங்கிலம், மலாய், தமிழ்)
- கவிதை (சீனம்,ஆங்கிலம், மலாய், தமிழ்)

**6. படைப்புகளை எவ்வாறு சமர்ப்பிக்கலாம்?**

அனைத்து விண்ணப்பங்களும் https://www.bookcouncil.sg/awards/slp-2026 இணையத்தளத்தின் வழி சமர்ப்பிக்கப்பட வேண்டும். உங்கள் சமர்ப்பிப்பு முழுமையடையாமல் மற்றும் தகுதியற்றதாக இருப்பதைத் தவிர்க்க விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் கவனமாகப் படிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அனைத்து உள்ளீடுகளும் நான்கு (4) இயற்பியல் நகல்கள் மற்றும் ஒரு (1) இலக்கமுறை நகல் ஆகியவற்றுடன் இருக்க வேண்டும்.

**7. இறுதி நாள் எப்போது?**

விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 15 மே 2026, மாலை 6 மணி (சிங்கப்பூர் நேரப்படி). ஒவ்வொரு முழுமையான விண்ணப்பத்துடனும் புத்தகத்தின் நான்கு (4) இயற்பியல் பிரதிகள்

சிங்கப்பூர் புத்தக மன்ற அலுவலகத்திற்குக் காலக்கெடுவுக்குள் அனுப்பி வைக்கப்படவேண்டும். தாமதமான அல்லது முழுமையற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. அன்புகூர்ந்து எங்கள் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் கவனமாகப் படித்துப் பாருங்கள்.

**<u>8. புனைவு/படைப்பாக்க அபுனைவு வகை என்றால் என்ன?</u>**

பிரிவில் புனைகதை மற்றும் படைப்பூக்கமிக்க அபுனைவு எழுத்துகள் ஆகிய இரண்டும் அடங்கும். புனைகதை என்பது கதை சொல்லும் உரைநடையை குறிக்கும்; இதில் சிறுகதைகள் மற்றும் நாவல்கள் அடங்கும். படைப்பாக்க அம்ச அபுனைவு படைப்பு என்பது உண்மையான நிகழ்வுகள், மனிதர்கள் அல்லது கருத்துகளைக் கொண்டு இலக்கிய நடையைப் பயன்படுத்தி உருவாக்கும் கதை இலக்கியத்தைக் குறிக்கிறது. இத்தகைய இலக்கிய நடையின் எடுத்துக்காட்டுகளில், இலக்கிய விமர்சனம், வாழ்க்கை வரலாறு, வாழ்க்கைக்குறிப்புகள், தனிநபர் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் ஆகியவை அடங்கும்.

**<u>9. என்னிடம் பயணம்/ சமையல்/ சாதனைக் கதை பற்றிய புத்தகம் இருக்கிறது. நான் அதனைப் புனைவு/படைப்பாக்க அபுனைவு பிரிவின்கீழ் சமர்ப்பிக்க முடியுமா?</u>**

SLP 2026, புனைவு/படைப்பாக்க அபுனைவு பிரிவில் புனைவு மற்றும் படைப்பு புனைவல்லாத எழுத்து ஆகிய இரண்டையும் ஏற்றுக்கொள்கிறது. படைப்புசார் புனைவல்லாத எழுத்தின் வரையறைக்கு, Q8-ஐப் பார்க்கவும். ஆனால், சமையல் புத்தகங்கள், சுய உதவிக் கையேடுகள், பயண வழிகாட்டி நூல்கள், கல்வி நூல்கள், தொழில் நூல்கள், கருத்துரைகள் அல்லது பாடப் புத்தகங்கள் ஆகியவற்றை நாங்கள் ஏற்கமாட்டோம்.

பொதுமக்கள் படிப்பதற்குக் கிடைக்கக்கூடியவையாகப் படைப்பு இருப்பதுடன், சிறப்புப்பிரிவினர் அல்லது கல்வித்துறை சார்ந்த வாசகர்களுக்காக இருக்கக்கூடாது.

**10. என் பதிப்பகம் இளம் வயது வாசகர்களுக்கான (YA) பிரிவில் விற்கும் ஒரு கவிதை/உரைநடைப் புத்தகம் என்னிடம் உள்ளது. நான் அதைச் சமர்ப்பிக்கலாமா?**

இளம் வயது வாசகர்களுக்கான (YA) படைப்புகள் சமர்ப்பிப்பதற்குத் தகுதியானவை.

**11. என் பதிப்பாளர் சிறுவர்களுக்கானது என வகைப்படுத்திய கவிதைகள்/உரைநடைகளை நான் சமர்ப்பிக்கலாமா?**

குழந்தைகளுக்காக எழுதப்பட்ட புத்தகங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**12. சாப் புக் அல்லது குறும் வடிவ வெளியீடுகள் சமர்ப்பிப்பதற்குத் தகுதியானவையா?**

இல்லை, சாப் புக், துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள், இதழ்கள் மற்றும் பிற குறும் வடிவ அல்லது தரமற்ற வெளியீடுகள் தகுதியானவை அல்ல. அனைத்து சமர்ப்பிப்புகளும், அந்தந்த வகைகளுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்யும் முழு நீள, வெளியிடப்பட்ட படைப்புகளாக இருக்க வேண்டும்.

**13. எழுத்தாளர்கள் குழுவும் நானும் இணைந்து இந்த நூலை எழுதினோம். நூலை இந்தப் போட்டிக்குச் சமர்ப்பிக்க முடியுமா?**

Singapore Book Council
Powering Our Imagination

பல படைப்பாளர்களால் (இரண்டுக்கு [2] மேற்பட்டோர்) எழுதப்பட்ட சிறுகதைகள், கவிதைகள் கட்டுரைகள் வரைகதைகள் அல்லது தொகுப்புகள் இந்த விருதுக்குத் தகுதியற்றவையாகும்.

**14. எந்த ஆண்டில் வெளியிடப்பட்டப் படைப்புகள் போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்?**

புனைவு/படைப்பாக்க அபுனைவு மற்றும் கவிதை நாவல் வகைகளுக்கு, படைப்புகள் 1 ஜனவரி 2024 முதல் 31 டிசம்பர் 2025 வரை வெளியீடு கண்டிருக்க வேண்டும்.

**15. என் புத்தகம் இன்னும் பதிப்பிக்கப்படவில்லை. ஆனால் பதிப்பகத்தின் அனுமதியைப் பெற்றுவிட்டது. முதலில் ஒரு கையெழுத்துப் பிரதியையும் பின்னர் புத்தகத்தையும் நான் சமர்ப்பிக்க முடியுமா?**

பதிப்பிக்கப்பட்ட படைப்புகள் மட்டுமே இந்தப் போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும். போட்டிக்குத் தகுதிபெற, படைப்புகள் நூல் வடிவத்தில் பதிப்பிக்கப்பட்டு, குறிப்பிட்டக் கால வரையறைக்குள் வர்த்தக அடிப்படையில் வெளியிடப்படுவதற்குத் தயாராக இருக்கவேண்டும். (கேள்வி 14-ஐ காண்க).

**16. என்னுடைய நூல் மின்-தளங்களில்/ கேட்பொலி புத்தக வடிவில் மட்டுமே பெறக்கூடியது. அதை சமர்ப்பிக்க முடியுமா?**

மின்-புத்தகங்கள் மற்றும் கேட்பொலி புத்தகங்கள் (இயற்பியல் வடிவங்களில் வெளியிடப்படாதவை) தற்போது விருதுக்குத் தகுதியற்றவையாகும்.

**17. எனது முந்தையப் படைப்புகளைத் தொகுத்துப் புத்தகமாக அண்மையில் வெளியிட்டேன். அதை சமர்ப்பிக்க முடியுமா?**

செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் அல்லது மின்-தளங்களில் முன்னர் பிரசுரிக்கப்பட்ட சிறுகதைகள், கவிதைகள் கட்டுரைகள் அல்லது வரைகதைகள் தொகுப்புப் புத்தகங்கள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் வெளியிடப்பட்டிருந்தால் அது ஏற்றுக்கொள்ளப்படும். (கேள்வி 14-ஐ காண்க

முன்னர் புத்தக வடிவில் வெளியிடப்பட்ட படைப்புகளும் “சிறந்த தொகுப்புகளும்” தகுதி பெறமாட்டவை. ஆனால், திரட்டிலுள்ள படைப்புகளில் குறைந்தது 80% முதல்முறையாக நூல் வடிவில் பதிப்பிக்கப்பட்டால், அந்த நூல் சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2026 போட்டிக்குத் தகுதி பெறும்.

**18. என்னுடைய புத்தகம் சில ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்டது. நான் அந்தப் புத்தகத்தின் அண்மை பதிப்பில் சில அத்தியாயங்களில் மாற்றங்களைச் செய்திருக்கின்றேன். இந்த புத்தகம் தகுதியானதா?**

முந்தைய ஆண்டுகளின் மறுபதிப்புகள் அல்லது புதுப்பிக்கப்பட்ட பதிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**19. ஒன்றுக்கும் மேற்பட்ட படைப்புகளை சமர்ப்பிக்க முடியுமா?**

ஆம். இந்தப் போட்டிக்கு ஒருவர், ஒன்றுக்கும் மேற்பட்ட படைப்புகளை சமர்ப்பிக்க முடியும். படைப்புகள் வேறுபட்டிருக்கவேண்டும். ஒரே படைப்பை வேறு விதத்தில் மாற்றி அமைக்கப்பட்ட படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**20. சில படைப்புகளைத் தொடராக ஒன்றுசேர்ப்பதன் மூலம் அவை மேலும் சிறப்படையும். அவ்வகையான நூல்களை நான் சமர்ப்பிக்க முடியுமா?**
இல்லை. ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள படைப்புகள் ஒரு படைப்பாக ஏற்றுக்கொள்ளப்படாது.

**21. நான் என் படைப்பைச் சுயமாகப் பதிப்பித்துள்ளேன். எனக்கு தகுதியுள்ளதா?**
ஆம், மேலே குறிப்பிட்ட அனைத்து விதிகளையும் பூர்த்தி செய்பவர் போட்டிக்கு விண்ணப்பிக்கத் தகுதிப் பெறுவார்.

**22. போட்டியின் வெற்றியாளர்களை நிர்ணயிப்பது யார்?**
ஒவ்வொரு பிரிவிலும் மூன்று நடுவர்கள் கொண்ட குழு இருக்கும். நடுவர்களின் முடிவே இறுதியானது, எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடியது. நடுவர்களின் முடிவு தொடர்பாக எந்த கடிதப் போக்குவரத்திற்கும் இடமில்லை.

**23. இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகள் எப்பொழுது அறிவிக்கப்படும்?**
சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2026 இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகள் 2026 அக்டோபர் நடுப்பகுதி அறிவிக்கப்படும். இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் எழுத்தாளர்களுக்கு மட்டுமே தகவல் தெரிவிக்கப்படும்.

**24. நான் இறுதிப் பரிசீலனைக்குத் தேர்வுப் பெற்றுள்ளேன். ஆனால், நான் பரிசளிப்பு விழாவில் பங்குப்பெற்று, பரிசு கிடைக்காததால் ஏமாற்றம்**

**அடைய விரும்பவில்லை. எனக்கு முன்னதாகவே வெற்றியாளர் யார் என்பதைத் தெரிவிக்க முடியுமா?**

முடியாது. வெற்றியாளர்கள் யார் என்பது பரிசளிப்பு விழாவிற்குமுன் அறிவிக்கப்படாது. இறுதிப் பரிசீலனைக்குத் தேர்வு பெற்ற அனைத்து போட்டியாளர்களும் விழாவில் பங்கேற்க அழைக்கப்படுவர். ஏதேனும் காரணத்தால் விழாவில் கலந்துகொள்ள இயலாதவர்கள், தங்களின் சார்பாக விழாவில் கலந்துகொள்ள பிரதிநிதி ஒருவரை முன்மொழிய வேண்டும். அவர்களின் படைப்பு வெற்றி பெற்றால் பிரதிநிதி விருதை ஏற்றுக் கொள்ளவேண்டும். வெற்றியாளர்கள் யார் என்பது டிசம்பர் 2026 தொடக்கத்தில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் மட்டுமே அறிவிக்கப்படும்.

**25. நான் சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2026 போட்டியில் வெற்றி பெற்றுள்ளேன். அடுத்தது என்ன?**

இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் வெற்றி பெற்ற எழுத்தாளர்கள், பொது உரைகள் ஆற்றவும், பயிலரங்குகள் நடத்தவும், மேலும்/அல்லது அறிவுரை வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவும் அழைக்கப்படுவர் (பொருந்தக்கூடிய இடங்களில்).
ஊடகங்களுடன் பேசவும், ஊடக ஈடுபாடுகளில் கலந்து கொள்ளவும், எஸ்.எல்.பி தொடர்பான அனைத்து சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர முயற்சிகளிலும் சிங்கப்பூர் புத்தக மன்றத்துக்கு ஆதரவளிக்கவும் நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள் (பொருந்தக்கூடிய இடங்களில்).

**26. உங்கள் வினா-விடை எதிலும் என் கேள்விக்குப் பதில் இல்லை. நான் யாருடன் தொடர்பு கொள்ளலாம்?**

நீங்கள் சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2026 விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பார்க்கலாம். மேல் விவரங்களுக்கு மற்றும் ஏனைய கேள்விகளுக்கு, programmes@bookcouncil.sg என்னும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

**Singapore Book Council Limited** (Company No.: 201805935W)
90 Goodman Road, Blk E #03-32, Goodman Arts Centre Singapore 439053 |+65 6342 5119
info@bookcouncil.sg | www.bookcouncil.sg